www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

## சமூக அறிவியல்

10 - ஆம் வகுப்பு

பதிவு எண்.

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I சரியான விடையைத் தேர்வு செய்யவும்.** 1 X 7 = 7

1. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்

இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

2. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா

இ) போப் ஈ) ஸ்பெயின்

3. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?

அ) சேம்பர்லின் ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்

இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

4. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ............... .

அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

5. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் .................. .

அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரபிரதேசம்

இ) மத்திய பிரதேசம் ஈ) கர்நாடகா

6. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360

இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

7. GDP யில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?

அ) வேளாண்துறை ஆ) தொழில் துறை

இ) பணிகள் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**II எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 15 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

8. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?
9. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.
10. பன்னாட்டு நிதியமைப்பின் நோக்கங்கள் யாவை?



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

11. தக்கான நிதியமைப்பின் நோக்கங்கள் யாவை?
12. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?
13. நீதிப் பேராணை என்றால் என்ன?
14. தனி நபர் வருமானம் என்றால் என்ன?
15. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.

III எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். 5 X 5 = 25

16. அ) ............... ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
ஆ) நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ............ என அழைக்கப்பட்டது.
இ) மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ..........
ஈ) .............. அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.
உ) இந்தியாவில் ........... துறை முதன்மை துறையாகும்.
17. ஜெர்மனியுடன் தொடர்புடைய எவர் செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக
18. இமய மலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
19. 1) வேறுபடுத்துக : அ) மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி
ஆ) வானிலை மற்றும் காலநிலை
2) மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் டெல்டாவை உருவாக்குவதில்லை.
20. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.
21. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
22. 1900 முதல் 1920 வரையிலான உலக வரலாற்றின் நிகழ்வுகள் ஏதேனும் 5 காலக்கோட்டில் எழுதுக.

IV பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 1 X 8 = 8

23. 1) இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செயக.
2) ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.

*(அல்லது)*

கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

1) ஆரவல்லி 2) மகாநதி
3) மாளவ பீடபூமி
4) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை
5) பன்னா உயிர்க்கோள பெட்டகம்
6) அந்தமான் நிக்கோபர் தீவுகள்
7) மன்னார் வளைகுடா 8) மலைக்காடுகள்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com